**IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.**

O.S. No.5/2025

Deposition of Witness for PW1.

Name : திரு. மரியந்தோணி
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2026.

<u>சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 18.07.2022 தேதியிட்ட பிரதிவாதி ஞானராஜ் எனக்கு எழுதி கொடுத்த கடன் உறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.1 (Stamp Paper ல் வாதி மற்றும் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை. மற்றும் முத்திரை தாள் 18.8.2022 அன்று வாங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி ஆவணம் 18.07.2022 ல் தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.). 11.11.2024 தேதியிட்ட நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.2. 11.11.2024 தேதியிட்ட அஞ்சலக ரசீது வா.சா.ஆ.3. 12.11.2024 தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4. பிரதிவாதியின் சொத்திற்கான வில்லங்க சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.5.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.